DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலாஜி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | முருகையா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 02/07/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுப்பட்டியில் குடியிருந்து கோவையில் ஒரு தனியார் நிறுவனத்தில் CNC ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் எதுவும் ஞாபகமில்லை. ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் திண்டுக்கல் டூ ஒட்டன்சத்திரம் ரோட்டில் ரெட்டியார்சத்திரத்தில் நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எனக்கு சொந்தமான TN 57 BF 9154 என்ற இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். எனக்கு விபத்து ஏற்பட்டு நான் மயங்கி விழுந்துவிட்டேன். அதில் எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டது. எனக்கு பின்னால் வந்த எனது நண்பர் கண்ணன் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். நான் மயக்கத்தில் இருந்ததால் என் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய வாகனம் குறித்து எனக்கு எதுவும் நினைவில் இல்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் புகார்தாரர் என்னும் இடத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டு இருந்ததால் நான் புகார் வாக்குமூலத்தின் எனது இடது பெருவிரலின் கைரேகையை வைத்தேன். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி  கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு நான் ரெட்டியார்சத்திரம் வந்து வீட்டிற்கு திண்டுக்கல் டூ ஒட்டன்சத்திரம் சாலையில் மேற்கு நோக்கி இடது புறமாக எனக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் TN 57 BF 9154 என்ற வாகனத்தை கோபிநாத சுவாமி அலுவலகம் பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது எனக்கு எதிரே வந்த TN 63 N 1856 என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் பின்னார் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மணிவாசகம் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து என் வண்டியின் மீது மோதியதில் எனக்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்பு அங்கிருந்தவர்கள் சிட்டி ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், என்னுடன் எனது நண்பர் கண்ணன் என்பவர் வந்தார். பின் எனது அம்மாவிற்கு தகவல் சொல்லி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து முதல் உதவி பெற்றுக்கொண்டு அருகில் உள்ள JJ அருள் மருத்துவமனையில் எனது மாமா செந்தில்குமார் என்பவர் உதவியுடன் சேர்ந்தேன் என்றும், எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதி எனக்கு காயத்தை ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது  எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.02 18:15:46 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 02/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கண்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சின்னையா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 02/07/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுப்பட்டியில் குடியிருந்து மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் இரவு சுமார் 8.00 மணியளவில் அ.சா.1 கோயம்புத்தூரில் வேலை செய்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். அப்போது ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே அ.சா.1 சென்று கொண்டிருந்த அப்பாச்சி வாகனம் விபத்து ஏற்பட்டது. நானும் எனது அண்ணன் முத்துச்சாமியும் அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தோம். திடீரென்று அ.சா1 சென்று கொண்டிருந்த வழியில் கூட்டமாக இருப்பதை பார்த்து நாங்கள் அங்கு சென்று பார்த்தோம். அப்போது அங்கே அ.சா.1 அடிபட்டு கிடந்தார். அ.சா1 –ன் மீது அரசு பேருந்து மோதியதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். பதட்டத்தில் அரசு பேருந்தை ஓட்டி வந்தவரை நான் பார்க்கவில்லை. அதன் பின்னர் அ.சா.1–ஐ தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். பின்பு JJ அருள் துரை என்ற தனியார் மருத்துவமனையில் அ.சா.1–ஐ சிகிச்சைக்காக அனுமதித்தோம். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி  கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு ரெட்டியார்சத்திரம் வந்து வீட்டிற்கு திண்டுக்கல் டூ ஒட்டன்சத்திரம் சாலையில் மேற்கு நோக்கி இடது புறமாக பாலாஜிக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் TN 57 BF 9154 என்ற வாகனத்தை கோபிநாத சுவாமி அலுவலகம் பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது எங்களுக்கு எதிரே வந்த TN 63 N 1856 என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் பின்னார் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த மணிவாசகம் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பாலாஜி வண்டியின் மீது மோதியதில் பாலாஜிக்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்பு அங்கிருந்தவர்கள் சிட்டி ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்தேன் என்றும், பின் பாலாஜியின் அம்மாவிற்கு தகவல் சொல்லி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு வந்து முதல் உதவி பெற்றுக்கொண்டு அருகில் உள்ள JJ அருள் மருத்துவமனையில் அவரது  மாமா செந்தில்குமார் என்பவர் உதவியுடன் சேர்த்தார் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது  எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.02 18:15:54 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 02/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw4

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சண்முகம் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 02/07/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுப்பட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. ஒரு நாள் இரவு சுமார் 10.00 மணியளவில் எனது அக்கா மகனான பாலாஜி அ.சா.1-க்கு அரசு பேருந்து விபத்து ஏற்பட்டு விட்டதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தகவலைப் பெற்றுக்கொண்டு திண்டுக்கல் JJ அருள்துரை மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1-ஐ பார்த்தேன். இந்த வழக்கில் ஏற்பட்டவிபத்தானது எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 10.08.2019 ஆம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு ரெட்டியார்சத்திரம் வந்து வீட்டிற்கு திண்டுக்கல் டூ ஒட்டன்சத்திரம் சாலையில் மேற்கு நோக்கி இடது புறமாக பாலாஜிக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் TN 57 BF 9154 என்ற வாகனத்தை கோபிநாத சுவாமி அலுவலகம் பஸ் ஸ்டாப் அருகே சென்றபோது எதிரே வந்த TN 63 N 1856 என்ற வாகனத்தை அதன் ஓட்டுநர் பின்னால் பெயர்

விலாசம் கேட்டு தெரிந்த மணிவாசகம் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து பாலாஜி ஓட்டி வந்த வண்டியின் மீது மோதியதில் பாலாஜிக்கு வலது கையில் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், பின்பு அங்கிருந்தவர்கள் சிட்டி ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போய் சேர்த்ததாக எனக்கு தகவல் சொன்னதன் பேரில் நானும் எனது அக்கா ஜெயலட்சுமியும் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது பாலாஜி மயக்கநிலையில் இருந்தார். பின்பு நானும் எனது அக்காவும் அங்கிருந்து JJ அருள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இல்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.02 18:16:02 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 02/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw5

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முத்துச்சாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கோவிந்தசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 02/07/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுப்பட்டியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 9.45 மணியளவில் ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நானும் எனது தம்பி கண்ணனும் அங்கே இருந்தோம். அப்போது போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள். நானும் எனது தம்பி கண்ணனும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.02 18:16:11 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 02/07/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : STC 534/2021

List of Witness : Lw6

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கண்ணன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சின்னையா | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 02/07/2026

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் புதுப்பட்டியில் குடியிருந்து மார்க்கெட்டிங் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 2019 ஆம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. ஒருநாள் இரவு 9.45 மணியளவில் ரெட்டியார்சத்திரம் மேற்கு சத்திரம் பஸ் ஸ்டாப் அருகே போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நானும் எனது தம்பி கண்ணனும் அங்கே இருந்தோம். அப்போது போலீசார் எங்களிடம் சாட்சி கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள். நானும் எனது தம்பி கண்ணனும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் கையொப்பம் செய்து கொடுத்த பார்வை மகஜரில் என்ன விபரம் எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.07.02 18:16:17 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 02/07/2026